# சட்ட ஆட்சியும் அது சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளமையும் : 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதிக்குப் பின் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடியினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

# Rule of Low and the challenges of its poevalance: A stady on the Political Crisis after 26th October 2018 in Sri Lanka

செ.சிவநாயகம்[1]

## ஆய்வுச் சுருக்கம்

ஜனநாயக முறைமையில் சட்வாட்சிக் கோட்பாடானது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது ஒருநாட்டில் ஆட்சிமுறையானது சட்டத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை இது வலியுறுத்துகின்றது. அத்துடன் அந்நாட்டிலுள்ள ஆட்சியாளர்களும், பிரஜைகளும் அங்குள்ள சட்டங்களுக்கு ஒத்தமுறையில் கட்டுப்படுதல் வேண்டும் என்பதை இது வலியுறுத்துகின்றது. இலங்கையில் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி ஆட்சிமாற்றம் தொடர்பாக நிறைவேற்றுத்துறைக்குத் தலைவரான ஜனாதிபதியினால் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் சட்டவாட்சிக் கோட்பாட்டினை சவாலுக்குட்படுத்தியிருந்தன. இதனால் நாட்டில் ஓர் அரசியல் நெருக்கடி நிலை உருவாகியிருந்தது. ஜனாதிபதி நாட்டின் அடிப்படைச் சட்டமாக விளங்குகின்ற அரசியலமைப்பிலுள்ள சில சரத்துக்களை மீறி ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தியதன் காரணமாக இவ்நெருக்கடி நிலை உருவாகியிருந்தது. இவ்நெருக்கடி நிலமையினால் சட்டத்துறையின் உயர் சபையான பாராளுமன்றத்தில் பெரும் கலவரநிலை உருவாகியிருந்ததுடன் நாட்டிலும் அரசாங்கம் பற்றிய குழப்பநிலை நிலவியது. இதனால் நல்லாட்சிமுறை அச்சுறுத்தலுக்குள்ளாகி, ஜனநாயகம் சவாலுக்குட்படுத்தப்பட்டமையினை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு சட்டவாட்சி பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொள்வதுடன் ஜனாதிபதி அரசியலமைப்பின் சில ஏற்பாடுகளை மீறியுள்ளமையினை கண்டறிவதனையும் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தவகையில் இவ் ஆய்வானது முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி பண்புரீதியான ஆய்வுமுறையியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதி அரசியலமைப்பின் எவ்வேற்பாடுகளை மீறியுள்ளார் என்பதையும் அதன்மூலம் சட்டவாட்சி எவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் சட்டவாட்சியைப் பாதுகாப்பதற்கான பல பரிந்துரைகளும் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

[1]செ.சிவநாயகம் சிரேஸ்ட விரிவுரையாளர் சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. மின்னஞ்சல்: *sivanayagamc@esn.ac.lk*

**திறவுச் சொற்கள்:** அரசியலமைப்பு, சட்டவாட்சி, நீதித்துறைச் சுதந்திரம், நல்லாட்சி, ஜனநாயகம்.

## அறிமுகம்

சட்டத்தின் அடிப்படையில் ஆட்சி புரியும் சட்ட ஆட்சிக் கோட்பாடானது ஜனநாயக விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கும் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். சட்டவாட்சிக் கோட்பாடானது அரசியலமைப்பு அரசாங்கமொன்றில் தனிமனித அபிலாசைகளை விட சட்டம் உயர்தன்மை வாய்ந்ததென வலியுறுத்துகின்றது. ஜனநாயக நாடுகளில் இயற்றப்படும் சட்டங்கள் ஒவ்வொன்றும் இத் தத்துவத்தை வரைக்கல்லாகக் கொண்டே இயற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒத்த வகையில் சட்டத்திற்கு கீழ்படிதல் அல்லது சட்டத்திற்கு முன் சமமாதல் என்பதே இதிலிருந்து பொருள் கொள்ளப்படுகின்றது. இந்தவகையில் இலங்கையில் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்ற சம்பவத்தைத் தொடர்ந்து ஒரு பாரிய அரசியல் நெருக்கடி உருவாகியது. அதாவது அரசியலமைப்பிற்கு முரணாக நிறைவேற்றுத் துறைக்கு தலைவரான ஜனாதிபதியினால் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் சட்டவாட்சியைக் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்திருந்தன. இன்னோர் வகையில் கூறுவதானால் இவ் நெருக்கடி நிலையானது சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான ஓர் அரசியலமைப்பு நெருக்கடியாகவும் நோக்கப்படுகின்றது.

ஒரு நாட்டில் சட்டத்தின் உயர் தன்மையில் மதிக்கப்படுகின்ற அரசியலமைப்பின் சரத்துக்களை நாட்டின் அரசியற் தலைவர் மீறிய செயற்பாட்டின் மூலம் சட்டவாட்சி சவாலுக்குட்படுத்தப்பட்டது. இச் சட்டவாட்சியானது நல்லாட்சியின் அடிப்படை பண்புகளில் முக்கியமானதாகும். இதன்மூலம் நல்லாட்சி முறை சீரழிவதற்கான வாய்ப்பினை இச்சம்பவம் ஏற்படுத்தியதுடன் ஜனநாயகமுறை தோல்வியடைந்த ஓர் சம்பவமாகவும் நோக்கப்படுகின்றது.

இந்தவகையில் இவ் ஆய்வானது சட்டவாட்சி பற்றிய விடயங்களை தெளிவுபடுத்துவதுடன் இலங்கையில் நிறைவேற்றுத்துறைக்கு தலைவரான ஜனாதிபதி அரசியலமைப்பின் செயற்பாடுகளை எவ்வாறு மீறி சட்டவாட்சியை சவாலுக்குட்படுத்தியுள்ளார்?, அதன் பிரதிபலிப்பாக எவ்வாறான விளைவுகள் ஏற்பட்டுள்ளன? என்பதையும், சட்டவாட்சிக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறாவண்ணம் தடுப்பதற்கான முன்மொழிவுகளையும் முன்வைப்பதாக அமைந்துள்ளது. இவ்வாய்விற்கான தரவுகள் ( திருத்தங்களுடன் கூடிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, நூல்கள், பத்திரிக்கைகளில் வெளியான கட்டுரைகள்) பெறப்பட்டு சமூக விஞ்ஞானங்களில் பெருமளவு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் பண்புரீதியான முறையிலே இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## சட்டவாட்சி

சட்டதின்படி ஆட்சி புரியும் சட்டவாட்சியானது பழமை வாய்ந்த ஒரு கோட்பாடாகும். இது பற்றி முதலாவதாக கருத்து தெரிவித்தவர் கிரேக்ககால அறிஞரான அரிஸ்ரோட்டில் ஆவார். இவரிற்கு முன் பிளேட்டோ, சட்டங்களில்லாது அரசனின் அறிவுஞானத்தின் அடிப்படையில் ஆட்சிபுரியும் இலட்சிய அரசினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இதனை விமர்சிக்கும் அரிஸ்ரோட்டில் ஆட்சியாளன் எந்தளவு அறிவாளியாக இருப்பினும் ஒரு தனிமனிதனின் ஆட்சியைவிட சட்டத்தின் ஆட்சியே சிறந்ததாகும் என்று வலியுறுத்துகின்றார்.

சட்டவாட்சி பற்றிய தற்காலக் கருத்து பிரித்தானிய அரசாங்க முறையினூடாக ஒழுங்கமைந்துள்ளது. 17ஆம் நூற்றாண்டில் அரசியல் அதிகாரத்தை பிரயோகித்தல் தொடர்பாக முடிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டத்தின் போது மன்னர் தான்தோன்றித்தனமாக அரசியல் அதிகாரத்தை பிரயோகித்ததை தடுப்பதற்காக சமகால பிரித்தானிய அறிஞர்களும் சட்ட அறிஞர்களும் சட்டவாட்சி பற்றிய எண்ணக்கருவை முன்வைத்தனர். அதன்படி ஆட்சியாளன் நாட்டின் பொதுச் சட்டங்களுக்குட்பட்டு அதன் அடிப்படையில் ஆட்சிபுரிய வேண்டும் என்று கருதப்பட்டது. சட்டவாட்சி என்பதன் மூலம் இரண்டு விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுச் சட்டங்களின்படி ஆட்சியாளன் ஆட்சிபுரிய வேண்டும் என்பது முதலாவதாகும். மற்றயது சட்டத்தின் முன் சகலரும் சமமானவர்கள், சட்டத்திற்கு அப்பால் எவருமில்லை என்பதுமாகும்.

இந்தவகையில் சட்டவாட்சி பற்றி ஒரு முறையாக கருத்தை முன்வைத்தவர் பிரித்தானிய சட்ட அறிஞரான A.V. டைசி ஆவார். இவர் எழுதிய The Law of the Constitution என்ற நூலின் மூலமாக இச் சட்டவாட்சிக் கருத்தினை முன்வைத்தார்(Dicey,A,V.1979).

இவர் சட்டவாட்சியோடு தொடர்பான மூன்று பிரதான விடயங்களை சுட்டிக் காட்டுகின்றார்.

i. ஆட்சியின்போது சாதாரண சட்டமே மேலானதாக இருத்தல்.
ii. சட்டத்தின் முன்னால் சகலரும் சமமானவர்களாக இருப்பதுடன் சட்டத்தின் சமமான பாதுகாப்பு சகலருக்கும் சமமாக கிடைக்கப்பெறுகின்றமை.
iii. பிரஜைகளின் உரிமைகள் பாதுகாத்துப் பேணப்படுதல்.

சட்டத்திற்கு இசைவாக ஆட்சியைக் கொண்டு நடாத்துவதே இவ் எண்ணக்கருவின் சாராம்சமாகும். இதன்படி ஆள்வோரும் ஆளப்படுவோரும் சட்டத்திற்கு கீழ்பட்டவர்களாக இருப்பதுடன் சட்டத்திற்கு சமமானவர்களாகவும் இருப்பர்.

டைசியின் கருத்துப்படி நாட்டில் ஒரு சட்டமுறைமை மட்டுமே இருக்க வேண்டும். இதன்பொருள் என்னவெனில் அரசியலமைப்பு அதனை அடிப்படையாக கொண்டு சட்டத்துறை பிறப்பிக்கும் சட்டங்கள் மற்றும் நீதித்துறையின் தீர்ப்புக்கள் ஆகிய மூன்று பகுதிகளும் இணைந்தவை என்பதாகும்.

சட்டத்தை மீறினால் மட்டுமே தண்டிக்க முடியும். நாட்டில் நடைமுறையிலுள்ள சாதாரண நீதிமன்றின் மூலமே நடைமுறையிலுள்ள சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தண்டனை வழங்க வேண்டும். அதேபோன்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைகளை மட்டுமே வழங்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட குற்றத்தை விசாரணை செய்வதற்கு புதிய சட்டங்களையும் புதிய நீதிமன்றங்களையும் உருவாக்க முடியாது.

மனித உரிமைகள் சட்டத்தின் மூலம் உரித்தாகுபவை அன்று என்றும் சட்டத்தின் மூலம் அவ் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இதன்மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வாறு டைசி வெளியிட்ட சட்டத்தின் ஆட்சி பற்றிய கருத்தானது தற்காலத்தில் பல விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்தாலும் ஜனநாயகம் நிலைநாட்டப்படவும் நல்லாட்சியை ஏற்படுத்தவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் சட்டவாட்சி பற்றிய கருத்து முக்கியத்துவம் பெறுகின்றது.

## இலங்கையில் தற்போதைய அரசியலமைப்பின் நிறைவேற்றுத்துறையில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்கள்

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பானது 1978ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த ஜனநாயக சோசலிசக் குடியரசு என்ற யாப்பாகும். இவ் அரசியல் யாப்பில் அரசாங்கத்தின் முக்கிய மூன்று துறைகளான சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளது அதிகாரங்கள் பிரித்து வளங்கப்பட்டுள்ளன. இதில் சட்டத்துறைக்கு பொறுப்பாக பாராளுமன்றமும் நிறைவேற்றுத்துறைக்கு பொறுப்பாக ஜனாதிபதியும், பாராளுமன்றத்திலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையும், நீதித்துறைக்கு பொறுப்பாக நீதிமன்றங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இதில் நிறைவேற்றுத்துறையின் தலைவரான ஜனாதிபதி நிறைவேற்றதிகாரம் கொண்டவராக விளங்குகின்றார். இவ் ஜனாதிபதிக்கு 1978 மூலயாப்பின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரங்கள் மிதமிஞ்சியதாகவும் மற்றய துறைகளான சட்ட, நீதித் துறைகள் மீது தலையீடு செய்யக் கூடியதாகவும் அமைந்திருந்தன.

இதனால் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற வாதம் பல தரப்பினரிடமும் இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அரசியலமைப்பின் மீது கொண்டு வரப்பட்ட 17ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் குறிப்பிட்ட அளவான அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கான சில ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் மீண்டும் 2010ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 18ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் மூலயாப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைவிட மேலும் கூடுதலான

அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதனால் ஜனநாயகம், நல்லாட்சி பற்றிய சிந்தனை கொண்டவர்கள் மத்தியில் மேலும் அதிர்வலைகளை உருவாக்கியிருந்தன.

இவ்வாறான நிலையில் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியினாலும் அரசாங்கத்தினாலும்(சிவில் சமுகத்தினரது அழுத்தங்கள் மத்தியில்) நாட்டில் நல்லாட்சியை ஸ்தாபிக்க வேண்டும் என்ற விடயம் முன்னிலைப்படுத்தப்பட்டது. இந்த செயன்முறையின் ஆரம்பக்கட்டம் என்ற வகையில் 2015 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட 19ஆவது திருத்தம் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்திருத்தத்தினூடாக முக்கியமாக ஜனாதிபதிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த மிதமிஞ்சிய அதிகாரங்கள் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டன.

## அரசியல் நெருக்கடி நிலை

### பிரதமர் பதவி நீக்கப்படுதல்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிக்கை இலக்கம் 2094/43 இன் ஊடாக இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரசியமைப்பின் சரத்து 42(4) இன் பிரகாரம் பதவி நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி பத்திரிக்கை இலக்கம் 2094/44 இன் உடாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அரசியலமைப்பின் சரத்து 42(4)அன் பிரகாரம் ஜனாதிபதியால் பிரதம மந்திரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது(கிருஷ்ணமோகன்,த.2018)

இச் செயற்பாடானது 1978 அரசியல் யாப்பின் 19ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அதிகாரங்களை மீறிய வகையில் ஜனாதிபதி செயற்பட்டுள்ளார் என பல தரப்பினராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் (1978) 42(4) பிரிவானது பிரதமர் நியமனம் தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றது. “ஜனாதிபதி, அவரது கருத்துப்படி எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையினைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரைப் பிரதமராக நியமித்தல் வேண்டும்” என்பதாகும்.

ஆனால் மூலயாப்பில் பிரதம அமைச்சர் ஒருவர் பதவி விலகல் பற்றிய ஒழுங்கு 19ஆவது திருத்தத்தினூடாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது (இலங்கை சோசலிச ஜனனாயக் குடியரசின் அரசியலமைப்பு-திருத்தங்களுடன்,2016). 46(2)ஆம் பிரிவு கூறுவதன்படி

அ. ஜனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறந்தாலொழிய அல்லது

ஆ. பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாலொழிய அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்தும் பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்தும் பதவி வகித்தல் வேண்டும் என்கின்றது.

இவற்றினைவிட ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்ட பிரதமரை நீக்குவதற்கான அதிகாரம் தொடர்பாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. இதன்மூலம் மூலயாப்பில் பிரதமரை நீக்குவதற்கு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை 19ஆவது சீர்திருத்தம் நீக்கிவிட்டது புலனாகின்றது. ஆகவே அரசியலமைப்பின் 46(2)ஆம் பிரிவின்படி ஜனாதிபதி பிரதம அமைச்சரை பதவியிலிருந்து நீக்குவதற்கு அதிகாரமில்லை என்பது தெளிவாகின்றது.

எனவே 2018.10.26 அன்று ஜனபதிபதி, அரசாங்கம் தொடர்பாக (ஏற்கனவே பதவியிலிருந்த பிரதமரைப் பதவிநீக்கி புதிய பிரதமரைப் பதவியில் அமர்த்தி, புதிய அமைச்சரவையினை நியமித்தமை) மேற்கொண்ட இச் செயற்பாடானது அதாவது நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பினை மீறி செயற்பட்டுள்ளமை சட்டவாட்சிக்கு முரணான செயற்பாடாக கொள்ளப்படுகின்றது.

## பாராளுமன்றம் ஒத்திவைப்பும் கலைப்பும்

அரசியல் நெருக்கடியின் தொடச்சியாக 2018 ஒக்டோபர் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிக்கை இலக்கம் 2094/45 இன் பிரகாரம் அரசியலமைப்பின் சரத்து 70(3) இல் ஜனாதிபதிக்குரியதாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டும் ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு நடைமுறைக்கு வரும்வகையில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுகின்றது என்றும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு அடுத்த கூட்டத் தொடரை ஆரம்பிப்பதற்காக பாராளுமன்றத்தில் கூடுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது (கிருஷ்ணமோகன்,த.2018).

இப் பாராளுமன்ற ஒத்திவைப்புச் செயற்பாடானது புதிதாக பிரதமராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ அணியில் மாற்றுத் தரப்பிலிருந்து பலரை உள்வாங்குவதற்கான தந்திரோபாய செயற்பாடாகவே மேற்கொள்ளப்பட்டதாக பல தரப்பினர் குற்றம் சுமத்தினர். இதற்கு ஆதாரமாக சில மாற்றுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜபக்ஷ அணியில் இணைந்து கொண்டமை இதனை உறுதிப்படுத்துகின்றது.

எவ்வாறிருந்தும் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி சபாநாயகர் கரு ஜெயசூரிய பாராளுமன்ற அங்கத்தவர்களின் கௌரவத்தினைப் பாதுகாக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தார். இக்கடிதத்தில் ஐக்கியதேசியக் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் 125 பாராளுமன்ற உறுப்பினர்கள்

கையொப்பமிட்டு பெரும்பான்மையினை வெளிப்படுத்தியிருந்தமையினை குறிப்பிட்டிருந்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளினையும் சிறப்புரிமைகளினையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் பாராளுமன்றத்தினை உடன் கூட்டுமாறும் கேட்டிருந்தார். இதன்படி பாராளுமன்றத்தினை கூட்டுவதாக ஜனாதிபதி சபாநாயகருக்கு உறுதி வழங்கியிருந்தார். இதற்கிணங்க கார்த்திகை மாதம் 4ம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 2095/50 இன் மூலம் அரசியலமைப்பின் சரத்து 70(1) இன் பிரகாரம் 2018ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி முற்பகல் பத்துமணிக்கு பாராளுமன்றத்தினை கூட்டுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்(கிருஷ்ணமோகன்,த.2018).

இவ்வாறிருக்கும் போது 2018.11.07 அன்று சபாநாயகரின் தலைமையில் உத்தியோகப்பற்ற முறையில் ஒன்றுகூடிய கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் நிலையியற் கட்டளைச் சட்டத்தை இடைநிறுத்தவும் அதன்மூலம் உறுதியான அரசாங்கத்தினை நிறுவவும் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் சபாநாயகர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு அரசியல் நெருக்கடி மேலும் அதிகரித்த நிலையில் 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 2096/70 மூலம் ஜனாதிபதியினால் மேலும் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது(கிருஷ்ணமோகன்,த.2018).

இதில் ‘‘நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும்வகையில் பாராளுமன்றத்தினைக் கலைப்பதுடன், புதிய பாராளுமன்றத்தினை 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதி கூட்டுமாறும் அழைக்கின்றேன்’’ என குறிப்பிடப்பட்டிருந்தது.

மூலயாப்பில் ஜனாதிபதி பாராளுமன்றத்தினைக் கலைத்தல் சம்பந்தமாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுத் தேர்தல் ஊடாக பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் பாராளுமன்றத்தினை கலைக்க முடியாது. அதன்பின் குறிப்பிட்ட காரணங்களைக் கூறி பாராளுமன்றத்தினைக் கலைக்க முடியும்.

எவ்வாறாயினும் பாராளுமன்றம் கலைப்புப் பற்றிய விடயம் மூல யாப்பிலிருந்து அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தினூடாக பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது. சரத்து 70(1) ஊடாக ஜனாதிபதி பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தினை கூட்டுமாறு அழைக்கலாம், அமர்வு நிறுத்தலாம், அத்துடன் கலைக்கலாம் (இலங்கை சோசலிச ஜனனாயகக் குடியரசின் அரசியலமைப்பு-திருத்தங்களுடன்,2016).

‘‘ஆயினும் ஜனாதிபதி பாராளுமன்றம் அதன் முதல் கூட்டத்திற்காக நியமித்த திகதியிலிருந்து நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்களுக்கு குறையாத ஒரு காலப்பகுதி முடிவுறும்வரை பாராறுமன்றத்தின் மொத்த எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றிலிரண்டிற்கு குறையாத உறுப்பினர்களால் அதன் சார்பில் வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றினால் அங்ஙனம் செய்யுமாறு பாராளுமன்றம் ஜனாதிபதியை வேண்டினாலொழிய அதனைக் கலைத்தலாகாது’’.

இதன்மூலம் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கு தனக்கு வழங்கப்பட்ட கால எல்லைக்கு முன்னர் பாராளுமன்றத்தினை கலைத்தமை இலங்கை அரசியலமைப்பை புரிதல், வியாக்கியானப்படுத்துதல், உரிய முறையில் அமுல்ப்படுத்துதல் தொடர்பான அரசியலமைப்பு நெருக்கடிகளை முன்னெப்போதும் இல்லாதளவிற்கு தேசிய அளவில் உருவாக்கியிருந்தது.

## அரசியல் நெருக்கடி நிலையில் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்களும் பாராளுமன்றத்தில் கலவரமும்

அரசியல் நெருக்கடி தொடர்ந்துகொண்டிருக்கின்ற நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக பல மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அதாவது பாராளுமன்றத்தினை ஜனாதிபதி கலைத்தமை அரசியலமைப்பிற்கு முரணானது எனவும் எனவே பாராளுமன்றத்தினைக் கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை நிராகரிக்குமாறும் விசாரணைகளின் இறுதி முடிவுகள் வரும்வரையிலும் பொதுத்தேர்தலை ஒத்திவைக்குமாறும் உத்தரவிடுமாறு உயர்நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றினை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்றம் 2018.11.13 அன்று குறுப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடையுத்தரவினை பிறப்பித்தது (கிருஷ்ணமோகன்,த.2018).

அதனைத் தொடர்ந்து 2018.11.14 ஆம் திகதி சபாநாயகரால் பாராளுமன்றம் கூட்டப்பட்டது. பாராளுமன்றம் கூடியவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிலையியற் கட்டளையினைத் தளர்த்தும் அல்லது இடை நிறுத்தும் பிரேரணை ஒன்றினை சபையில் முன்மொழிந்தார். (நிலையியல் கட்டளைச் சட்டம் என்பது பாராளுமன்ற நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டும் விதிகளை உள்ளடக்கியதாகும்) பின்னர் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்துவதற்கான வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதற்குச் சாதகமாக அறுதிப் பெரும்பான்மை பாராளுமன்றத்தில் கிடைத்தது. அதன்மூலம் நிலையியல் கட்டளைச் சட்டம் தளர்த்தப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. பின் இப்பிரேரணை மீது பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடாத்த முற்பட்டபோது சபையில் குழப்பம் ஏற்பட்டது. எவ்வாறாயினும் குரல் வாக்கெடுப்பு மூலம் வாக்குப்பதிவு நடாத்தப்பட்டு அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டதாகவும் சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிரதமர் மகிந்தராஜபக்ஷ உரை மீது வாக்கெடுப்பு நடாத்த சபாநாயகர் முயன்றபோது பாராளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் ஆலோசனைக்கு இணங்க மீண்டும் பிரதமமந்திரிக்கும், அமைச்சரவைக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையினை

நடாத்த முற்பட்டவேளை மீண்டும் பாராளுமன்றத்தில் மோசமான கலவர நிலைமை ஏற்பட்டது. இதற்கு மத்தியில் நிகழ்ந்த வாக்கெடுப்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீண்டும் நிறைவேற்றப்பட்டது.

2018.11.27 மற்றும் 28ஆம் திகதிகளில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டமையானது சட்டத்திற்கு முரணானது என்று உத்தரவிடக்கோரி உயர் நீதிமன்றமத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 2018.11.30ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அவரது அமைச்சரவை பதவியிலிருப்பதற்கு சட்டரீதியாக அனுமதியில்லை என ஐக்கிய தேசியக் கட்சியினால் யாதுரிமை எழுத்தாணை முறைப்பாடு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது(வீரகேசரி-15.12.2018). (யாதுரிமை எழுத்தாணை என்பது ஒருவர் எந்த அதிகாரத்தைக் கொண்டு பதவி வகித்தார் அல்லது வாக்குரிமை அளித்தார் என்பதை நிரூபிக்குமாறு அவருக்கு இடும் ஆணையாகும்.) இம் முறைப்பாட்டிற்கான தீர்ப்பு 2018.12.03ஆம் திகதி வழங்கப்பட்டது. இதில் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவைக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறு நெருக்கடி தொடர்ந்து கொண்டிருக்கும் வேளையில் 2018.12.13 அன்று உயர் நீதிமன்றமானது, ஜனாதிபதி பாராளுமன்றத்தினைக் கலைத்தமை அரசியலமைப்பையும் சட்டத்தையும் மீறும் செயல் என்று தீர்ப்பு வழங்கியது (வீரகேசரி-15.12.2018).

எனவே ஆட்சித்துறை தலைவராக விளங்குகின்ற ஜனாதிபதியானவர் நாட்டின் உயர் சட்டமான அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டதற்கு மாறாக பாராளுமன்றத்தினை கலைத்தமை மூலம் அவர் சட்டவாட்சிக்கு முரணாக செயற்பட்டுள்ளார் என்பது அரசியல் யாப்பினை பாதுகாக்கும் நீதித்துறையின் உயர் அங்கமான உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

## முடிவுரை

நாட்டில் சட்டம் என்பது மிக முக்கியமானது. அச்சட்டத்தின் அடிப்படையிலேயே ஆட்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அச்சட்டங்களை ஆள்வோர், ஆளப்படுவோர் என்ற வேறுபாடின்றி சகலருக்கும் சமமானதாக அமையப்பெற வேண்டும் என்பதுடன் சகலரும் அவற்றினை உரிய முறையில் கடைப்பிடிக்கவும் வேண்டும். இந்தவகையில் ஒரு நாட்டின் அதியுயர் சட்டமாகக் கருதப்படுகின்ற அரசியலமைப்பு அதற்குரிய பண்புகளுடன் உருவாக்கப்படுவதுடன் அது பேணிப்பாதுகாக்கப்படுவதும் முக்கியமானதாகும். அதைப் பேணிப்பாதுகாப்பதில் நீதித்துறையின் பங்களிப்பு முக்கியமானதாகும். இவ் நீதித்துறையானது சுயாதீனமாகத் தொழிற்படும் பொழுதே இப் பணியினை சரியாக நிறைவேற்ற முடியும். இவ்வாறு அரசியலமைப்பு சரியாக நடைமுறைப்படுத்தப்படும் பொழுதே அவ்வரசியலமைப்பின் மீதும் அதன்மூலம் உருவாகும் சட்டங்கள் மீதும் சாதாரண மக்கள் நம்பிக்கை கொள்ள வழியேற்படும்.

அவ்வாறான நம்பிக்கை ஏற்படும் பொழுதே சட்டங்களை மதித்து செயற்படவும் சட்டவாட்சி உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவும் ஜனநாயகம், நல்லாட்சி நிலவவும் வழியேற்படும். இவ் ஒழுங்குகள் மீறப்படும் பொழுது சட்டவாட்சி சீரழிந்து எதேச்சதிகாரமும் சர்வதிகாரப் போக்கும் நாட்டில் நிலைபெறவும் அதன்மூலம் நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டு பொருளாதார சீரழிவு, மனிதவுரிமை மீறல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற வழியேற்படும்.

இந்தவகையில் இலங்கையில் இடம்பெற்ற அரசியலமைப்பை மையப்படுத்திய நெருக்கடியானது அரசியல் தலைவரால் (நிறைவேற்றுத்துறையின் தலைவர் ஜனாதிபதி) பிரதமர் தலைமையிலான அமைச்சரவையுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாகவே நிகழ்ந்துள்ளது வெளிப்படுகின்றது. ஆனால் அரச தலைவரான ஜனாதிபதி இவ் அதிருப்தியினைத் தீர்த்துக்கொள்ள அதியுயர் சட்டமான அரசியலமைப்பை தவறாகப் பயன்படுத்தியமை மிகப்பெரிய குற்றமாகும்.

இவ்வாறு ஜனாதிபதி தவறாகச் செயற்படுவதற்கு அவருக்கு ஆலோசனை வழங்கும் சட்ட ஆலோசகர்கள் முரணான தகவல்களை வழங்கியமையும் காரணமாகக் கொள்ள முடியும். எவ்வாறாயினும் ஜனாதிபதியானவர் அரசியலமைப்பின் சரத்துக்களில் தெளிவின்மை காணப்படுகின்றது என கருதும் பட்சத்தில் அதுபற்றிய தெளிவினைப் பெறுவதற்கு உயர் நீதிமன்றத்தில் ஆலோசனை பெறமுடியும் என அரசியலமைப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே பிரதமரை பதவி நீக்குவதிலோ மற்றும் பாராளுமன்றத்தினைக் கலைக்கும் விடயத்திலோ அவருக்கு தெளிவின்மை ஏற்பட்டிருந்தால் அவர் உயர் நீதிமன்றத்தில் ஆலோசனை பெற்றிருக்கலாம். அதைவிடுத்து திடீரென பிரதமரைப் பதவி நீக்கியதும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவற்ற உறுப்பினரை புதிய பிரதமராக நியமித்தமையும் பொருத்தமற்ற காரணத்தினைக் கொண்டு பாராளுமன்றத்தினை ஒத்தி வைத்தமையும் இவற்றுக்கு மேலாக தனக்கு வழங்கப்படாத அதிகாரத்தினைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தினைக் கலைத்தமையும் பாரிய அரசியல் நெருக்கடியினைத் தோற்றுவிக்க காரணமாக அமைந்தது.

இவ்வாறு ஜனாதிபதியின் அரசியலமைப்பு மீறல் செயற்பாடும் அதனைத் தொடர்ந்து மக்களால் தெரிவு செய்யப்பட்டு நாட்டுக்கு தேவையான சட்டங்களை உருவாக்கும் மேல்நிலை மன்றமாகவும் விளங்கும் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைகளும் மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியிருந்தன. இதன்மூலம் பாராளுமன்றத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலையினை உருவாக்கியிருந்தது. இது ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்தானதாகும். பாராளுமன்றத்தினுள் இடம்பெற்ற வன்முறைகள் மக்கள் மத்தியில் பெரும் எடுப்பில் விரிவடையாததனால் நாட்டில் பெரும் கலவரம் இடம்பெறவில்லை என்பது ஆறுதலளிக்கும் விடயமாக இருந்தது. ஆனால் இவ்வாறான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் எப்போதும் பெரும் குழப்ப நிலையினை உருவாக்காது என எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு அரச தலைவரால் அரசியலமைப்பு மீறப்பட்ட செயற்பாடுகளும் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அனாகரிகமான செயற்பாடுகளும் இலங்கையைப் பற்றி சர்வதேச அளவிலும் களங்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. சர்வதேச நாடுகள் இதுவரை இலங்கையில் ஜனநாயகமும் சட்டவாட்சியும் குறிப்பிடத்தக்களவு பேணப்படுகின்றது எனக் கொண்டிருந்த கருத்து நிலையினை இச் செயற்பாடுகள் பின்தள்ளியிருந்தன.

எப்படியிருந்தும் அரசியல் தலைவரால் அரசியலமைப்பு மீறப்பட்டமை தொடர்பாக பல்வேறு தரப்பினரால் உயர் நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தொடுக்கப்பட்ட மனுக்கள் மீது வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் மூலம் நீதித்துறை அரசியலமைப்பினைப் பாதுகாப்பதற்கான செயற்பாட்டினை சிறப்பாக ஆற்றியுள்ளமை இலங்கை மக்கள் மத்தியிலும் சர்வதேச அளவிலும் பாராட்டப்பட்டிருந்தன. அத்துடன் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையும் சுதந்திரமும் இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இவைகளின் மூலம் இந்நாட்டில் ஜனநாயகம் முழுமையாகத் தோற்றுப் போகவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.

எனவே சட்டவாட்சி சரியாகப் பேணப்படுவதற்கு அரசியலமைப்பு மீறல் செயற்பாடுகளோ அல்லது ஏனைய சட்டங்களை மீறுகின்ற செயற்பாடுகளோ இடம்பெறாவண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். தற்போதுள்ள அரசியலமைப்பின்படி ஆட்சித்துறைக்குப் பொறுப்பான ஜனாதிபதியும் பாராளுமன்றத்திலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இதில் ஜனதிபதி ஒரு கட்சியினைச் சேர்ந்தவராகவும் பிரதமர் தலமையிலான அமைச்சரவை மாற்றுக் கட்சியினைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் நெருக்கடிநிலை ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது. 2005 ஆம் ஆண்டு சந்திரிகாகுமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தவேளை மாற்றுக்கட்சியினைச் சேர்ந்த ரணில் விக்கரமசிங்க பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். அவ்வேளை இரு கட்சிகளுக்குமிடையில் இருந்த முரண்பாட்டினால் ஜனாதிபதி பாராளுமன்றத்தினைக் கலைத்து விட்டார். இது இலங்கையின் அரசாங்கமுறை அமைப்பு பற்றிய ஓர் குறைபாடாகும். இருந்தும் 19ஆம் சீர்திருத்தத்தின் மூலம் சில விடயங்கள் சீர்திருத்தப்பட்டன. எவ்வாறாயினும் இம் முரண்பாடுகள் முற்றாக நீங்கிவிடவில்லை. ஆகவே அரசியலமைப்பினூடாக ஆட்சியமைப்பில் சிர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும்.

மேலும் சட்டங்களுக்கு ஆள்வோர் ஆளப்படுவோர் என்ற வேறுபாடின்றி சகலரும் கீழ்படிந்து நடத்தல் வேண்டும். அவ்வாறு கீழ்படியாதோருக்கு எதிராக நீதித்துறையினூடாக உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இதில் யாரும் விலக்களிக்கப்பட முடியாது. தற்போதைய அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு சட்டத்தை மீறியதற்கு எதிராக வழக்குத் தொடர முடியுமானாலும் அவருக்கு தண்டனை வழங்க முடியாது. இது சட்டவாட்சி (சட்டம் சமத்துவமானது) என்ற கருத்தியலுக்கு முரணான செயற்பாடாகும். எனவே சகலரும் சட்டத்திற்கு கீழ்படிவதும் கீழ்படியாத போது

தண்டனை வழங்குவதற்குமுரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இச்சட்ட ஏற்பாடுகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நீதித்துறைக்கு வழங்கப்படுதல் வேண்டும். இச் செயற்பாடுகள் ஒழுங்காக இடம்பெற சுயாதீனமாகச் செயற்படக்கூடிய வகையில் நீதித்துறை கட்டியமைக்கப்பட வேண்டும்.

இவையனைத்திற்கும் மேலாக அரசியலமைப்பின் முக்கியத்துவம், சட்டவாட்சி பற்றிய அறிவும், இவைகள் புறந்தள்ளப்படுவதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி ஆள்வோர், ஆளப்படுவோர் சகலரும் அறிந்து கொண்டு செயற்படும் ஒரு சிறந்த அரசியல் கலாசாரம் உருவாக்கப்படுவதன் மூலமே ஒரு சிறந்த ஜனநாயகத்தினைப் பேணி நல்லாட்சியினை உருவாக்க முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு திருத்தங்களுடன் அரசினர் ஆணைப்படி வெளியிட்டது. மறுமதிப்பு 2016.
- கிருஸ்ணமோகன்,த. 2019, இலங்கையின் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான அரசியலமைப்பு நெருக்கடி-2018, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- சர்ஜீன்,ஏ. 2011. சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள், சாந்தியில்ல வெளியீட்டகம், ஒலுவில்.
- Briawz. Tamanaha. 2009, On this Rule of Law, Cambridge University Press.
- Dicey, A.V.1979, Introduction to the study of the Law of the Constitution, Oxford University press.
- Jose Maria Maravall Adam Prazeworski, Democracy and Rule of Law, 2003, Combridge University Press.


**பத்திரிகைகள்**


- வீரகேசரி 21/11/2018, ஜோன்,கே.ஜீ, ‘‘பாராளுமன்ற நிலையியல் கட்டளை என்றால் என்ன?, இடைக்காலத் தடை என்றால் என்ன?’’
- வீரகேசரி 28/11/2018, ஜோன்,கே.ஜீ, ‘‘பாராளுமன்றமும் நீதி மன்றமும் பற்றி நீங்கள் அறிவது என்ன?’’
- வீரகேசரி 26/12/2018, ஜோன்,கே.ஜீ: ‘‘1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு உறுப்புரையும் 19 ஆம் திருத்தத்தின் பின் உள்ள உறுப்புரையும் பற்றி நீங்கள் அறிவதென்ன?’’
- வீரகேசரி 15/12/2018, எம்.எம்,சமட். ‘‘நம்பிக்கை’’
- வீரகேசரி 7/11/2018, மாணிக்கவாசகம்,பி. ‘‘சமர்க்களம்’’

- வீரகேசரி 15/12/2018. ‘‘ரணிலின் பதவி நீக்கம் முதல் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புவரை’’,
- வீரகேசரி 30/11/2018, ஜயதேவ உயங்கொட ‘‘அரசியலமைப்பு , நீதித்துறை, பிரஜைகள்’’
- வீரகேசரி 21/11/2018, ஜெகான் பெரெரா ‘‘அரசியல் நெருக்கடியைத் தொடக்கி வைத்தவரே முடித்தும் வைக்க வேண்டும்’’